1917—1918ல் நம்முடைய நிலைமை இப்போதைக்காட்டிலும் கேவலமாயிருந்தது. ஜெர்மனி, ஐரோப்பா முழுவதும் வியாபித்துவிட்டது; ஆஸ்திரியா, துருக்கி, பல்கேரியா ஜெர்மனிக்குத் துணைநாடுகளாய்விட்டன; (கிரீஸைத்தவிர) பால்கன்ஸ்நாடுகள் ஜெர்மன் ஆதீனத்திலிருந்தன; ஸிரியா, பாலஸ்தீன், ஐராக் (ஒருபாகம்), அரேபியா (ஏறக்குறைய முழுபாகம்) ஜெர்மனிக்கு சுவாதீனமாயிருந்தன. பெல்ஜியம் (சிறுபாகத்தைத் தவிர), வட பிரான்ஸ் (நிலக்கரிநாடு—தொழில் பெருத்த நாடு), லொரேன் (இரும்புச்சுரங்கநாடு) இவைகளையும் ஜெர்மனி ஆக்கிரமித்து விட்டது.

அப்பொழுது நமக்குத்துணையாக, இதாலி, பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா தேசங்களிருந்தாலும் அவைகளால் உதவியொன்றுமில்லை:—

முதலாவதாக இதாலியை எடுத்துக்கொள்வோம். 1917-ல் இதாலிமேல் ஆஸ்திரியா படையெடுத்தபோது 6,00,000 சைன்யத்தையும், 3,000 பீரங்கிகளையுமிழந்து பின்வாங்கி, பிறகு 10 பிரிடிஷ், பிரென்சுப்படைகள் போய் மீட்டிவரும்படி நேரிட்டது. இதாலியின் கடற்படையை ஏட்ரியாடிக் கடலில் நிலைநிறுத்த நம்முடைய கப்பல்கள் துணைக்குப்போகவேண்டியிருந்தது. இதாலியால் பண நஷ்டமே ஒழிய லாபமொன்றுமில்லை.

பிரான்ஸூம் பிரயோசனப்படவில்லை. 1917 மார்ச்சில், நிவேல் என்ற சேனாபதி படையெடுத்துப் பின்வாங்கி, அதினால் பிரெஞ்சு சைன்யங்கள் அதைர்யப்பட்டு, சமாதானம் செய்துவிடவேண்டுமென்று கலகம் செய்ய ஆரம்பித்தன.

இந்த வருஷத்தில் ராஜீய கலகமேற்பட்டு ரஷ்யா நமது கக்ஷியிலிருந்து வெகுதூரமாய் விலகி விட்டது.

அமெரிக்கா நம்மோடு பெயருக்குச் சேர்ந்தாலும், தளவாடங்களை சேர்த்துக் கொண்டு, கரையிலும், ஆகாயத்திலும் சண்டைசெய்ய ஒருவருஷமாய்விட்டது; அதற்குள் நம்மைத் தோற்கடித்துவிடலாமென்று ஜெர்மானியர் நினைத்தார்கள்.

ஆகவே, 1917-ம் வருஷத்தில் நம்முடைய நிலைமை வியாகுலத்தைக் கொடுக்கும்படியாகத்தானிருந்தது.

அந்த வருஷத்திய மார்ச்சு மாதத்தில் பாக்டாடை பிடித்த வெற்றி ஒன்றுண்டு; இது சற்று ஆறுதலைக்கொடுத்தது.

கடல் யுத்தம்.

1917-ல் நிலைமை கெட, வேறுசில காரணங்களுமுண்டு:—150 ஜெர்மன் கடல் மூழ்கிகள் தடையின்றி சஞ்சரித்து நம்முடைய 169 வியாபாரக்கப்பல்களை சேதமாக்கின. 6-மாதங்களுக்குள் பஞ்சமும், தோல்வியும் ஏற்படுமென்ற சந்தேகம் வந்துவிட்டது. அமெரிக்காவிலிருந்து உதவி வரவில்லை; ஜப்பான் 6 டிஸ்ட்ராயர் (destroyer) கப்பல்களை மத்தியதரைக்கடலுக்கு அனுப்பியதைத் தவிர வேறோருதவியும் புரியவில்லை. சொந்த பாதுகாப்பை கவனிப்பதோடு, நேயநாடுகளுக்கு உணவும் யுத்த சாமான்களும் கடல் மார்க்கமாயனுப்பும்வேலை நம்மைப்பொறுத்துவிட்டது. நடுநிலைமை நாடுகளும் குறைந்துவிட்டன. நார்வே, ஸ்வீடன், டென்மார்க், ஹாலண்ட், ஸ்விட்ஸர்லண்ட், ஸ்பெயின், கிரீஸ் இவைகள் பெயருக்குத்தான் நடுநிலைமை வகித்தன. ஜெர்மன் அதிகாரிகள் இவைகளைக் கலைத்து, நம்மிடத்து துவேஷத்தையுண்டாக்கி, ஜெர்மனிக்குள் சாமான்கள் போகாது நாம் போட்டிருந்த முற்றுகையை நிஷ்பிரயோசனமாக்கி, ஜெர்மனிக்குள் ரகஸ்யமாய் விளைபொருள்களை ஏற்றுமதிசெய்ய நகரோடுகள் தலைப்பட்டன.

சுருங்கச்சொல்லுமிடத்து, 1917-ம் வருஷத்தில் பிரிடனுக்கு நேயர்களே கிடையாது. பிரிடிஷ் சாம்ராஜ்ய சைன்யத்தையும், கடற்படையையும் தவிர வேறு துணையில்லை. 'தனிமையாய் யுத்தம் செய்வது சாத்தியமா' என்று சந்தேகப் படக்கூடிய காலமாயிருந்தது. ஆனால் அடுத்த வருஷத்திலேயே வெற்றியடைந் தோம்.

ஒப்பிட்டுப்பார்த்தால், அப்போதைக்கு, இப்போது நமக்கு பலம் அதிகம். ஏன் பயப்படவேண்டும்?

வெற்றிக்கு நிஸ்ஸந்தேகமான அறிகுறிகளென்ன?

1917-ம் வருஷத்திய யுத்தமெல்லாம் பழம் கதை. இப்பொழுது யுத்த மானது யந்திர சாதனங்களைக்கொண்டு வெகு வேகமாய் நடக்கிறது. விமானப் போர் அபிவிருத்தியாய்விட்டது. மனதைக் கலக்கவும், களைக்கச் செய்யவும் பிரசாரங்கள் வலுத்துப்போயின. "தப்போ, தவறோ, கடைசியில் வெற்றி நமக்குத்தான்" என்ற காலம் போய்விட்டது. ஆகவே, நிஸ்ஸந்தேகமானவைகளை மட்டும் இக்காலத்தில் நம்பி நிற்கவேண்டும். அவைகளென்ன?

முதலாவதாக, 1917—1918-ல் போல், இப்பொழுது ஐரோப்பா முழுவதும் ஜெர்மனி வியாபித்திருந்தாலும் வேண்டிய தாதுப்பொருள்கள் கிடையாது. ஐரோப்பாவில் 360 லக்ஷம் டன் பெட்ரோல் வருஷத்துக்கு பூமியிலிருந்து எடுக்கப் படுகிறது—ரஷ்யா-270 லக்ஷம்; ருமேனியா-70 லக்ஷம். இது போதாது.

இரண்டாவதாக, பருத்தி, சணல், ரப்பர், எண்ணெய்கள், கம்பளி (100-க்கு 50 பாகம்), தேயிலை, கோகோ, நிக்கல் (100-க்கு 80 பாகம்), வெள்ளீயம், இரும்பு கலந்த உலோகங்கள் கடல் மார்க்கமாய் வரவேண்டும். கடலாதிபத்தியம் நம்மிடத்தில் இருப்பதால் வரவர ஜெர்மனிக்கு பொருளாதார நிலைமை கெடத்தான் செய்யும்.

கடலாதிபத்தியம் குறையவில்லை.

சமீபத்தில் பிரெஞ்சு யுத்தக் கப்பல்களை நாம் பிடித்துக்கொண்டதிலிருந்து நம்முடைய கடலாதிபத்தியம் குறையவில்லை என்பது தெளிவாகும். பிரெஞ்சுக் கப்பல்களை சேர்த்துக்கொண்டு நம்மை எதிர்க்க மனோராஜ்யம் செய்து கொண்டிருந்த ஜெர்மானியராசை ஒழிந்தே போய்விட்டது. கட்டிமுடியாத ஜீன் பார்டை (Jean Bart)-த் தவிர, மற்ற பிரெஞ்சு, யுத்தக் கப்பல்களையெல்லாம்—அதாவது பெரிய யுத்தக்கப்பல்—1 ; 10,000 டன் கப்பல்கள் எல்லாம் ; சிறிய கப்பல்கள்—200-ஐக்கைப்பற்றி, போருக்கு லாயக்கில்லாதபடி செய்துவிட்டோம். ஜெர்மானிய, இதாலியக் கப்பல்களைக் காட்டிலும், நம்முடைய கடற்படை அதிகம். 1917-ல் இவ்வளவு யுத்தக்கப்பல்கள் நமக்குக் கிடையாது. 1917-ஐவிட வியாபாரக் கப்பல்களும் 20 லக்ஷம் டன் அதிகமாயிருக்கின்றன. நார்வே, ஹாலண்ட், பெல்ஜியம் கப்பல்களுள்பட 220 லக்ஷம் டன் வியாபாரக்கப்பல்களிருக்கின்றன. இவைகள், நீர்மூழ்கி, கடல் வெடி, விமான ஆபத்துக்களிலிருந்து நன்ருய் பாது காக்கப்படுகின்றன. 1917 ஏப்ரல் ஒரு மாதத்தில் உடைந்த கப்பல்களைக் காட்டிலும், இந்த யுத்தாரம்பத்திலிருந்து இதுவரையிலுடைந்த கப்பல்கள் குறைவு.

மேலும், வருஷத்துக்கு 40 லக்ஷம் டன் வியாபாரக் கப்பல்கள் புதிதாகக் கட்டப்படுகின்றன. முதலாளிகளும், தொழிலாளிகளும் ஒரு மனதுப்பட்டு வெகு ஸமரஸமாய் கப்பல்களைக் கட்டுகிருர்கள்.

ஆகாய ஆதிபத்தியமும் நமக்கு நெருங்குகிறது.

வெற்றியடைய வேண்டுமானல், கடலிலும், ஆகாயத்திலும் ஆதிபத்தியம் வேண்டும். ஜெர்மனிக்கு கடல் ஆதிபத்தியமில்லையென்பது நிச்சயம். ஜெர்மனியின் விமானக்கணக்குத் தெரியவில்லை. ஆனல் நம்முடைய விமானங்களும், விமானிகளும் மேல்தரமென்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே நடந்த எதிர்ப்புகளில் நம்மைவிட எதிரிக்கு நஷ்டம் இரண்டரைப்பங்கு என்று தெரிகிறது.

இரண்டாவதாக, நாமும், நமக்காக அமெரிக்காவும், புதுவிமானங்களை எதிரியைவிட அதிகமாகக் கட்டுகிருேம். ஆஸ்திரேலியாவிலும், கானடாவிலும் விமானங்களையும், விமானிகளையும் தயாரிக்கிருர்கள். இந்த விமானங்களில் சிலர் ஏற்கனவே யுத்தத்தில் வீரர்களென்ற பெயர் வாங்கி விட்டார்கள். சற்றுத் தாமதமாயிருந்தாலும், இந்தியாவிலும் விமானங்கள் கட்ட ஆலோசனைகள் நடந்து வருகின்றன. இவ்விதங்களில் நாளுக்கு நாள் ஆகாய பலம் அதிகரிக்கிறது.

பிரான்ஸிலிருந்து திரும்பிய ஆட்களுள்பட 15 லக்ஷம் சைன்யம் இங்கிலாந்திலிருக்கிறது. உள்நாட்டுப் பாதுகாப்புக்கும், வெளிநாட்டுப் படை எடுப்புக்கும் இவை உபயோகப்படும். இவ்வளவு நன்றாய் தயாரிக்கப்பட்ட சைன்யம் இது வரையில் இங்கிலாந்திலிருந்ததில்லை, தைர்யமாயும், ஒற்றுமையாயும், யுத்தத்திற்கு சித்தமாய் நிற்கிற அதிகாரிகளும் ஒருமனதுப்பட்டு வேலை செய்கிறார்கள்.

நடு கீழ்நாடுகள் (Middle East) சைன்ய பலம்.

பிரிடிஷ் இந்திய, ஆஸ்திரேலிய, நியூ-ஸீலண்ட் படைகள்கூடிய மற்றொரு பெரிய சைன்யமொன்று நடு கீழ்நாடுகளி(Middle East)லிருக்கிறது. இது, ஏற்கனவே, லிபியா எல்லைப்புறத்தில் சண்டை செய்து வெற்றியடைந்தது. இப்பொழுது அலெக்ஸான்டிரியா கடற்படை, ஸூயஸ்கால்வாய் இவைகளைக் காத்துக்கொண்டு, இதாலியப் படைகள் சுதேசத்துக்குத் திரும்பாமலும் உணவு முதலிய தேவைகள் வராதபடி குறுக்கே நிற்கிறது.

செங்கடலில் சஞ்சரித்த இதாலிய நீர்மூழ்கிகளை அழித்து விட்டபடியால் இந்தியக்கடலில் பயமில்லை.

நடுக் கீழ்நாட்டு சைன்யத்தைப் பலப்படுத்த இந்திய கடற்கரை நாடுகளில் ஆட்களும் தளவாடங்களும் சேகரமாகின்றன. இதற்காக இந்தியாவிலும் ஆஸ்திரேலியாவிலும் புதுத்தொழிற்சாலைகள் கட்டுகிறார்கள். நடுக் கீழ்நாடுகளுக்கு யுத்தம் விரைவில் பரவலாம்.

நம்முடைய கக்ஷி நியாயமென்று ஆமோதித்து அமெரிக்க தேசம் ஏராளமான யுத்த தளவாடங்களை அனுப்பி வருகிறது. அமெரிக்க விமானங்களை இங்கிலாந்திலும், இதர இடங்களிலும் பார்க்கலாம். சண்டையில் சேர்ந்துகொள்ளாவிட்டாலும், மனோவாக்கு, காரியங்களில் மனிதனுக்கு உள்ள சுயேச்சை அழியாதிருக்க பிரிடன் செய்யும் யுத்தத்துக்கு முடிந்த வரையில் உதவி செய்யவேண்டுமென்ற எண்ணம் அமெரிக்காவுக்கு நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருகிறது.

இதைப் பார்த்தால் நாம் தனித்து நிற்கவில்லையென்றும் தோன்றுகிறது.

II

இங்கிலாந்தைப் படையெடுக்க முடியுமா?

ஹிட்லருடைய தற்புகழ்ச்சியும், பயமுறுத்தலும், பொய்ப் பிரசாரமும் காதைத்துளைக்கின்றன. இதிலிருந்து சிலர் இங்கிலாந்து சீக்கிரத்தில் படை எடுக்கப்படுமென்று நினைக்கிறார்கள். ஹிட்லர் வார்த்தைகளையும், வெளி வரும் யுத்தத்திட்டங்களையும் நம்பக்கூடாது. இங்கிலாந்தை எதிப்பதற்குப் பதிலாக வேறு யோசனைகளையும் செய்து வரலாம்.

ஹிட்லருக்கு ராணுவத்தலைவர் மூவர்களுண்டு. இவர்களில் ரீடர் (Raeder) என்ற கடல் ராணுவத்தலைவர் ஹிட்லருக்கு பவ்யப்பட்டவர், இவர், இங்கிலாந்தை எதிர்க்க பிரெஞ்சுக்கப்பல்களை உபயோகிக்க நினைத்தார். அதாவது, பிரான்ஸ் தோற்றுப்போனவுடன், அதன் கப்பல்களை, பேருக்கு நிராயுதபாணி, நிச்சஞ்சலமாக்கி, ஆனால், உண்மையில், ஜெர்மன்மாலுமிகளையும், நிர்வாகிகளையும் கொண்டு ஓட்டி, இங்கிலீஷ் கால்வாயைப்படையெடுத்து, ஜெர்மன் சைன்யங்களையும் இவைகள் துணையால் அயர்லாந்தி (Ireland)ல் இறக்கவும் ஆசைகொண்டிருந்தார்.

பிரெஞ்சுக்கப்பல்களை நாம் பிடித்ததிலிருந்து இந்த மனக்கோட்டை பாழாய் விட்டது. படையெடுக்க, இனி வேறு யோசனைகள் செய்தாகவேண்டும்: புதிய ராஜீய, ராணுவ ஏற்பாடுகள் தேடவேண்டும்; இவைகள் பூர்த்தியாகிற வரையில் இங்கிலாந்து படையெடுப்பை நிறுத்தி வைக்கவேண்டும். மாரிகாலம் வருமுன் யுத்தத்தை முடித்து விடுவதாக ஹிட்லர் வாக்குக்கொடுத்திருக்கிறார். அவ்விதம் முடிக்காவிட்டால் ஜெர்மனியிலும், ஜெர்மனி பிடித்த நாடுகளிலும் கடும் பஞ்சம் வருவது நிச்சயம். நாம் போட்டிருக்கும் முற்றுகையைத் தப்பி உணவுப்பொருள்கள் உள்ளே செல்லமுடியாது. பஞ்சத்தோடு கலகமும் ஏற்படும். ஹிட்லர் எதற்கும் துணிந்தவர். பஞ்சம் வந்தாலென்ன? சாகட்டுமே! கலகம் வந்தாலென்ன? சிறைச்சாலைகளி (Concentration Camps—சிறை விடுதிகள்)ல்லையா? வேண்டுமானால், புதுச்சிறைகளையும் கட்டிவிடுவோம்—என்ற மனப்பான்மை ஹிட்லருக்கு உண்டு.

இது நிற்க, மற்றவர்களைப்போலவே, இங்கிலாந்தும் படையெடுப்பு வரும் என்றே எதிர்பார்த்துத் தயாராய் நிற்கிறது.

9-நூற்றுண்டுகளாக இங்கிலாந்தைப் படையெடுத்தவர்களில்லை. இப்பொழுது படையெடுக்க முடியுமாவென்று சற்று நிதானிப்போம்.

இம்மாதிரி படையெடுப்பு சிரம சாத்தியமானது; வெகுதுர்லபம். பிரமாதமான ஏற்பாடுகளைச் செய்து பிழைபடாது நடத்தவேண்டும். ஆனால் ஜெர்மானியர் தீர்க்காலோசனை செய்பவர்கள்; ஒவ்வொன்றையும் கவனமாய் செய்து முடிக்கும் வல்லவர்கள், அறையிலாடியே அம்பலத்திலாடுவார். நார்வேயைப் பிடித்தது இப்படித்தான்—ஆரம்பித்துவிட்டால் உயிர், பொருள் சேதமெவ்வளவு ஏற்பட்டாலும் கடைசி வரையில் சண்டை செய்துதான் முடிப்பார்கள். ஜெர்மன் ராணுவ அதிகாரிகளின் ஆலோசனையின் போக்கை சற்று ஊகிப்போம்.

உலகத்திலேயே, இது வரையில், இவ்வளவு மகத்தான படையெடுப்புக் கிடையாது. ஹிட்லருக்கும் இது பெரிதுதான். ஆனால் ஏதோ புதிதான தந்திரமோ, சஸ்திரமோ, ஹிட்லர் ஒளித்து வைத்திருப்பதாக நினைப்பது மடமை. ஹிட்லர் ஜால வித்தைக்காரனல்ல; எதிர் பாராதொன்றையும் செய்யமுடியாது. நம்மிடத்திலும் நிபுணர்களிருக்கிறார்கள்; ஜால வித்தைகளொன்றும் செய்யக் காணேம். இங்கிலாந்தை எதிர்க்க இரண்டு வழிதான்—கடலிலும், ஆகாயத்திலும் நம்மை எதிர்த்துத்தானகவேண்டும். வேறு வழியில்லை.

கடலிலும், ஆகாயத்திலும் சண்டை செய்துதான் நார்வே பிடிக்கப்பட்டது. எதிர்பாராத சம்பவமானதால் ஆச்சரியமாயிருந்தது. விமானங்களைக்கொண்டும், விமானக் குடைகளைக்கொண்டும் 20,000 துருப்புகளை ஹாலந்தி (Holland) லிறக்கினார்கள். இதில் 300 விமானங்களும், அனேக ஆயிர ஆட்களும் சேதம். இதே மாதிரி, இங்கிலாந்திலும் 50,000 பேர்களிறங்குவதாக வைத்துக் கொள்வோம். இவர்களிறங்கிய பிறகு அழுத்தமாய் கட்டப்பட்ட அரண்களைத் தாண்டவேண்டும்; நன்றாய்ப் பழக்கப்பட்ட, உயர்ந்த ஆயுதங்களை வைத்திருக்கும், யுத்த ஆவல் கொண்டிருக்கும் 20 லக்ஷ போர் வீரர்களை முறியடிக்கவேண்டும். ரஸ்தாக்களை சேதப்படுத்தலாம்; பல வேஷங்களைத் தரித்துக்கொண்டு குழப்பத்தை உண்டாக்கலாம்; ஆனால், முடிவில், இவர்கள் பூராவாக பலியாவது நிச்சயம். இவர்களை "தற்கொலைச் சைன்யம்" என்றே சொல்லலாம். ஒருவன் கூட உயிர் பிழைக்கமாட்டான். ஹாலந்திலிருந்த மாதிரி 50,000 உள்ளூர் துரோகிகளும் இங்கே கிடையாது.

படையெடுத்தால் மட்டும் போதுமா? இங்கிலாந்தைப் பிடித்தல்லவோ ஆகவேண்டும். இதற்கு யந்திர பீரங்கிகள் சகிதமாய் பெரிய சைன்யம் கடலைத் தாண்டி வரவேண்டும். 1,500 பேர்கள் கொண்ட சைன்யம் ஒன்று வர பெரிய கப்பல்கள் இருபதாவது வேண்டும். முழுசைன்யத்துக்கும் நூற்றுக்கணக்கான கப்பல்கள்வேண்டும். இம்மாதிரியான பேராசைகொண்டு, முன் ஒரு காலத்தில் ஸ்பெயின் அரசன் பிலிப்பும், பிறகு, நெபோலியனும், கப்பல்களைத் திரட்டிக் கொண்டு புறப்பட்டார்கள். இங்கிலாந்துக்கு வந்து சேரவேயில்லை. ஹிட்லருக்கும் இந்த கதிதான்.

ஆனால் சைன்யங்களை ஏற்றிவர ஹிட்லருக்கு வேண்டிய வியாபாரக் கப்பல் களிருக்கின்றன. யுத்தாரம்பத்திலிருந்து ஜெர்மன் கப்பலொன்றுவது தலைகாட்ட வில்லை. துறைமுகங்களில் பாசிபிடித்து நிற்கின்றன. வடக்கே நார்விக் (Narvik) லிருந்து தெற்கே ப்ரெஸ்ட் (Brest) வரையில் துறைமுகங்களுக்கும் குறைவில்லை. ஆனால் கப்பல்களை யெல்லாம் ஒரு இடத்தில் சேர்ப்பது துர்லபம். கப்பல் கூட்டங்களை நம்முடைய விமானங்கள் நாள் தப்பாது எதிர்க்கின்றன. ஜெர்மன் நில பீரங்கிகள், விமானங்கள் பாதுகாப்பு இவைகளுக்குப்போதாது.

கப்பல்களைத் திரட்டிவிட்டதாக வைத்துக்கொள்வோம். துறைமுகத்தைத் தாண்டி வெளிவந்தால் சமுத்திரமெல்லாம் வெடிகளாகவிருக்கின்றன. இவைகளைப் பொருக்கப்பொருக்க, நம்முடைய கடல்-விமானங்கள் புதுவெடிகளைப் போட்டுக் கொண்டு போகின்றன.

வெடிகளைத்தாண்டி நடுக்கடலுக்கு ஏதோ வந்துவிட்டதாகவும் வைத்துக் கொள்வோம். எல்லாம் தயாராகயிருக்கிறது. ஜெர்மானியர் சிறு விஷயங்களைக் கூட பரிஷ்காரமாய் செய்யக்கூடியவர்களல்லவா? ஒவ்வொரு சிப்பாயும் இறங்க வேண்டிய ஊர், கொல்லவேண்டிய மனிதர்கள் ஜாபிதா முதற்கொண்டு வைத்திருப்பான். இங்கிலாந்தைப் பிடித்தவுடன் இங்கிலாந்து பாங்கி (Bank of England) நிர்வாகத்துக்கு உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டு சைன்யத்துடன் வரலாம். இருந்தாலும், இவர்களையேற்றிக் கப்பல்கள் வந்துசேரவேண்டுமே,

நார்வேயில் சைன்யங்களை இறக்கப் பனி மழை உதவிற்று; அதன் மறைவில் கப்பல்கள் வந்துவிட்டன. நம்முடைய கடலில் பனி மழை பெய்யாது. இப்பொழுது கோடை. கோடையில் இரவு நேரம் சுருக்கமானது. வியாபாரக் கப்பல்கள் மெள்ளச்செல்லும். அக்கரை துறைமுகங்களையெல்லாம் இடைவிடாது வேவுபார்த்து வெடிகளை வருஷித்துவருகிறோம். இவைகளிலிருந்து தப்பித்துக் கொண்டு, விளக்குகளை அணைத்துவிட்டு, ரேடியோயந்திரங்களை (கம்பியில்லாத தந்தி-Wireless)யும் மூடிவிட்டு, இரவில், இருள் மறைவில் தெரியாமல் கடலைத் தாண்டிவிட முடியாது.

நம்முடைய துறைமுகங்களுக்குள் டோவர் (Dover)தான் எதிரிக்கு வெகு சமீபமானது. இங்கு யுத்தக்கப்பல்களும், சில பீரங்கிகளும், விமானங்களும் எதிர்க்கும். அதேசமயத்தில் வேறுசில யுத்தக்கப்பல்கள், விமானங்கள் ஆதரவில், ஜெர்மன் சைன்யங்கள், டோவருக்கப்பாலுள்ள வேறொரு துறைமுகத்துக்கு வரப்பார்க்கலாம். நாம் கோருவதும் இதைத்தான். இவ்விதம் ஜெர்மன் கப்பல்கள் இரண்டு பகுதிகளாகப்பிரிந்தால் நம்முடைய கடற்படைக்கு இரையாகிவிடுவது நிஸ்ஸந்தேகம். ஏற்கனவே ஜெர்மன் யுத்தக்கப்பல்கள் அநேகம் போய்விட்டன; பாக்கிக்கப்பல்களை தொலைக்க நமது கடற்படை காத்துக்கொண்டிருக்கிறது.

நமது கடற்படையை எதிர்ப்பது ஜெர்மனிக்கு சாத்தியமில்லை. மத்திய தரைக்கடலில் அடைபட்டிருக்கும் இதாலியக் கப்பல்களும் துணைக்கு வர முடியாது. ஆனால் பாம்பர் விமானங்களைக்கொண்டு கப்பல்களை உடைத்து விடலாமென்று நினைக்கிறார்கள். இதைப்பற்றி பிரசாரமும் பலமாய் நடக்கிறது. நார்வே யுத்தத்தில் இவ்விதம் நம்மைத் தோற்கடித்ததாகவும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இதெல்லாம் இதாலி கிணற்றடிப் பிள்ளையாராக இருந்தபோது முஸோலினியை ஏய்க்கப் பேசியபேச்சு. நாம் தயாராவதற்குள்ளாக, ஜெர்மன் விமானங்கள் விரைவாக வந்து விட்டதால் நாம் நார்வேயில் பின்வாங்கவேண்டியிருந்தது. ஜெர்மானியர் சொல்லுகிறபடி விமானங்கள் யுத்தக்கப்பல்களை உடைக்கவில்லை. நிபுணர்கள் அபிப்பிராயமுமிதுதான். ஜெர்மன் விமானக் கூட்டத்துக்கு நடுவே நம்முடைய யுத்தக்கப்பலொன்று சென்று ஸ்டாவெஞ்சரை (Stavenger) எதிர்த்தது. வார்ஸ்பைட் (Warspite) யுத்தக் கப்பல், நார்விக் வளைகுடாவில் தைர்யமாய் தனியே நுழைந்து இட்டவேலையைச்செய்து திரும்பி வந்தது. 500 பவுண்டு குண்டு விழுந்தும் பழுதுபடாது ராட்னி (Rodney) என்ற யுத்தக் கப்பல் இப்பொழுதும் வேலைசெய்து வருகிறது.

டன்கர்க் (Dunkirk)லிருந்து சைன்யங்கள் வெளியேறாமல் செய்ய நம்முடைய கப்பல்களை வெடிவிமானங்களைக்கொண்டு உடைத்துவிட முடிந்த வரையில் பார்த்தார்கள்—நடக்கவில்லை. கப்பல்கள் 540 தடவைகள் டன்கர்க் வந்து போனதில் 100-க்கு 5-தடவைகள்தான் அவைகள் மேல் குண்டுகள விழுந்தன; அதுவும், கப்பல் திரும்ப முடியாத, கப்பல் கூட்டமாகவிருந்த இடங்களிலும், ஒடுக்கமான கால்வாய்களிலும்தான்.

ஆனால் டன்கர்கில் ஜெர்மனி முழுபலத்தையும் பிரயோகம் செய்யவில்லை என்று சொல்லலாம். இங்கிலாந்தைப் பிடிக்க, விமானப்படை யெல்லாவற்றையும் திரட்டி வரலாம். இதாலி விமானங்களும், வெகுவாய்ச்சேரும். ஏனென்றால், இதாலி பத்திரிகை ஒன்று சொல்லுகிறபடி நமக்கிருக்கும் ஆகாய, கடல் ஆதிபத்தியம் இவர்களுக்குப் பிடிக்கவில்லை. முக்கிய பெரிய சண்டை ஒன்று ஓரிடத்தில் நடக்கும்போது, அதேசமயத்தில் இதர இடங்களையும் தாக்கி நம்முடைய விமானங்கள் பல இடங்களில் சிதறிப்போகும்படி செய்து விடலாம்.

இங்கிலாந்துக் கரையோரமெல்லாம் வெடிகளைப் போட்டிருக்கிறோம். இவைகளை விலக்கிக்கொண்டு கரைவந்து சேர்ந்தால், அப்பொழுதுதான் நிஜமான யுத்தம். அதாவது தரைச்சண்டை ஆரம்பமாகும். கடலிலும், தரையிலும் சண்டை செய்வதில் இதுதான் கஷ்டம். தென், தென்கிழக்கு கரைகளில் குன்றுகளதிகம்; இங்கே இறங்க முடியாது; துறைமுகங்களெல்லாம் காபந்து செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கப்பால், தெம்ஸ் (Thames) கழிமுகத்தில் இருந்து ஹம்பர் (Humber) வரையில் சதுப்பு நிலம்; குழியும், வாய்க்கால்களுமாக இருக்கும்.

படையெடுப்பு வெகு பிரயாசமான காரியம்.

முதலாவதாக, கரையோரத்தில ஒரு இடத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டும். விமானக்குடைகளிலிறங்கி, அங்கிருக்கும் நில பீரங்கிகளை உடைத்துவிடவேண்டும், அல்லது பிடித்து விடவேண்டும்; இதற்கு உதவியாக கப்பலோடு மிதந்துவரும் பீரங்கிகளையும், பாயும் விமானங்களையும் உபயோகிக்கவேண்டும். உள்நாட்டோடு சம்பந்தப்படாமல் பிடித்த இடத்தை வளைத்துக்கொள்ள வேண்டும். பிறகு கப்பல்களிலிருந்து ஜெர்மன் சைன்யங்களையும் தளவாடங்களையும் இறக்கவேண்டும்.

விமானப்படைகள் நமக்குக் குறைவென்று சொல்வதுண்டு. ஆனால் வெகு விரைவாக புதுவிமானங்கள் கட்டப்படுகின்றன. இதுவரையில் ஏற்பட்ட எதிர்ப்புகளில் நமது விமானங்களும் விமானிகளும், சண்டை செய்வதில் எதிரியைவிட நாலுபங்கு மேலென்று தெரிகிறது. சர்ச்சில் சொன்னபடி, முடிவில் நமக்குக் கடல்படை பலமிருக்கிறது: ஒருநாளுமிதற்கு அபஜயம் கிடையாது.

மேலும், சண்டைக் கப்பல்களோடு மிதந்துவரும் பீரங்கிகளும், விமான எதிர்ப்பு நிலபீரங்கிகளும், இதர பாதுகாப்பு, தற்காப்பு, காவல் ஏற்பாடுகளும் எங்கே பார்த்தாலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இதர நாடுகள் பட்ட பாட்டிலிருந்து சில அனுபவங்கள் நமக்கு வந்துவிட்டது. குடைகள் வழியாய் இறங்குவது இனி ஆச்சரியத்தைக்கொடுக்காது. இனி ஊர் ஜனங்கள் ஓடி ராணுவங்கள் செல்லும் வழிகளை அடைத்துக்கொள்ளாது பார்த்துக்கொள்வோம். பலத்த எதிர்ப்பினால் அரசாங்க நிர்வாகமும், சமாசார போக்கு வரத்தும் தடைபடாதிருக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். எதிரியின் பலத்தைக் குறைத்து மதித்து, நம்முடைய பலத்தை அளவுக்குமேல் மதித்து மோசம் போகவில்லை.

ஜெர்மனி தற்புகழ்ச்சி செய்துகொண்டிருக்கிறது. நாம் மனதைத் திடப் படுத்திக்கொண்டு வெற்றியை எதிர்பார்த்து நிற்கிறோம். பாம்பர் விமானக் கும்பல்கள் நகரங்களை அழிக்கலாம். ஆனால் யுத்த ஆவலோடு நிற்கும் நமது சைன்யங்களைத் தோற்கடித்துவிடமுடியாது. விமானங்களைக்கொண்டு லண்டனைத் தகர்த்து, பயமுறுத்தி, சற்று இணங்கச்செய்யலாம். ஆனால், பிரிடிஷ் மக்களை பிரித்துவிடமுடியாது. எது நேர்ந்தாலும் சமாதானமென்ற பேச்சுக்கிடையாது.

வார யுத்தச் செய்திகள்.

(8—8—40 லிருந்து 14—8—40 வரை).

பிரிடிஷ் கரைமேல் விமானப்போர்.—வியாழன், ஞாயிறு, திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் பிரிடிஷ் கரையோரங்களில் நடந்த விமானச்சண்டை இந்த வாரத்திய முக்கிய செய்தியாகும். வியாழக்கிழமை, 400 எதிரி விமானங்களோடு, 14 மணி நேரம், பிரிடிஷ் விமானங்கள் மல் யுத்தம் செய்தன. டன்கர்க் (Dunkirk) சண்டைக்குப்பிறகு, எதிரியை முறியடித்தது, இது இரண்டாம் தடவையாகும். 60 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன: பிரிடிஷ் நஷ்டம்—16 விமானங்கள்.

இதே மாதிரியான கடும்போர் ஞாயிற்றுக்கிழமையும் நடந்தது. மறுபடியும் 400 விமானங்கள் வந்து டோவர், போர்ட்லன்ட் கப்பல் கட்டுமிடங்களையும், கப்பல்களையும், கிழ்கரையிலிருந்த துணைக்கப்பல்களையும் எதிர்த்தன. எதிரிக்கு 60 விமானங்கள் நஷ்டம்.

போர்ட்ஸ்மத், ஐல் ஆப் வைட் (Isle of Wight), கென்ட், ஸஸ்ஸெக்ஸ் கரைகள், தெம்ஸ் நதிமுகம்—இவைகளை, 500 விமானங்கள் திங்கட்கிழமை தாக்கின. 61 எதிரி விமானங்கள் சேதமாயின: பிரிடிஷ் நஷ்டம் 13. 12 ஜெர்மன் விமானிகள் கீழே இறங்கினார்கள். அவர்கள் உடனே பிடிக்கப்பட்டு போலீஸ் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டனர்.

இங்கிலாந்தை வெருட்டுவதற்காக இந்தப் படையெடுப்புகள் நடப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் அங்கு ஒருவரும் இதற்கு பயப்பட்டதாகக் காணோம். வழக்கம்போல, ஜெர்மன் அதிகாரிகள், இங்கிலாந்தின் நஷ்டத்தை அதிகமாகவும், தங்கள் நஷ்டத்தைக் குறைத்தும் காண்பிக்கிறார்கள். செவ்வாய்க்கிழமை எதிர்ப்பில் 3 விமானங்கள்தான் நஷ்டமென்று சொல்லிக்கொண்டார்கள்; பிறகு, முழுப்புழுகாய்விடுமென்று, 12 விமானங்கள் போய்விட்டதாக இப்பொழுது பிரஸ்தாபம் செய்கிறார்கள்.

உண்மையில், இந்த மூன்று நாட்களில் 250 விமானங்களும், 700 விமானிகளும் நஷ்டம். பிரிடிஷ் நஷ்டம், விமானத்தில் 3-ல் 1 பங்கு, விமானிகளில் 10-க்கு 1 பங்கு.

யுத்தாரம்பத்திலிருந்து ஜெர்மனிக்கு நஷ்டம்: விமானம் 2,661; விமானிகள் 1,00,000; பிரிடிஷ் நஷ்டம்: விமானம் 143; விமானிகள் 1,800. பின் குறித்தபடி 100 ஜெர்மன் ஊர்கள் எதிர்க்கப்பட்டிருக்கின்றன:—

ப்ரமன்—29; ஹாம்பர்க்—25; ஹாம்—25; கெல் செங்கர்சன்–16; ஆஸ்னாப்ரக்கும் வில்ஹெல்ம்ஸ்ஹேவனும்—14; எம்டனும், ஸோயஸ்டும்—13; கீல்—11; எஸ்ஸன்—10; வென்ஸன்டார்ப்—9; ஹானோவர்—8; எம்ஸ்டார்ட்மண்டு கால்வாய்—6; மொத்தம் 166 எதிர்ப்புகள்.

கடற் சண்டை.—துருப்புகளையும், கப்பல் சிப்பந்திகளையும் ஏற்றிச்சென்ற மகமத் அல் எல் கட்ரி என்ற வியாபாரக் கப்பல் எதிரியால் உடைக்கப்பட்டு, 840 பிரயாணிகளில் 740 பேர்கள் காப்பாற்றப்பட்டார்கள். ஜூலை 29உ முடிய வியாபாரக் கப்பல் நஷ்டம்: பிரிடிஷ்—65,601 டன்; நேயர்—7,090 டன்; மொத்தம் 72,691 டன். ஆகஸ்டு 4-ம் தேதிவரை எதிரிக்கு நஷ்டம்: ஜெர்மனி-9,18,000 டன்; இதாலி—2,54,000 டன்; நடு நிலைமை நாடுகள்—26,000 டன்; மொத்தம்—11,98,000 டன்.

பிரான்ஸ்.—ஆல்ஸேஸ், லோ ரேன், லக்ஸம்பர்க் மாகாணங்கள் ஜெர்மனியோடு சேர்க்கப்பட்டு விட்டன. இனி லக்ஸம்பர்கில், ஜெர்மன் பாஷையை ஸர்க்கார் வழங்கவேண்டும்.

யுத்தத்தை உண்டாக்கியதற்கு ஜவாப்தாரிகளை நிர்ணயிக்க ஏற்படுத்தியிருக்கும் கச்சேரி (Court) 8-ம் தேதி வேலை துவக்கியது: மந்திரி வேலைகளிலிருந்த எம். டலாடியர், எம். டெல்பாஸ், எம். மாண்டல் மூவரும் விசாரிக்கப்படுவார்கள். எம். மாண்டல் கைது செய்யப்பட்டிருக்கிருர்.

பால்கன்ஸ்.—ருமேனிய, பல்கேரிய அரசர்கள் க்ரெய்வாவில் கூடிப் பேசினுர்கள். ருமேனியா தேசத்தை அதிகமாக எடுத்துக்கொள்ளாமல் பிரஜைகளை அதிகமாக மாற்றிக்கொள்ளுவார்கள்போல் தோன்றுகிறது. டாபருஜாவிலும், ட்ரான்ஸில்வேனியாவிலும் வசிக்கும் ஜனத்தொகையில் சிலரான பல்கேரியர்களையும், ஹங்கேரியர்களையும் இவர்கள் சுதேசத்தருகிலிருக்கும், ருமேனிய எல்லைப்புறங்களுக்குக் குடியேற்றி, குடியேறிய சிறு பாகங்களை ஹங்கேரிக்கும், பல்கேரியாவுக்கும் கொடுத்து விடுவதாக உத்தேசம்.

ஆகஸ்டு 6-ம் தேதி **எஸ்தோனியா** ரஷ்யாவுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

நடுக்கீழ் நாடுகள்:—

(*a*) **பிரிடிஷ் ஸோமாலி லாண்டு** மேல் இதாலி படையெடுத்து ஸீலா, ஹார்கைஸா, ஒட்வேன் ஊர்கள் பிடிக்கப்பட்டிருக்கின்றன. பிரிடிஷ் படையை இன்னும் சந்திக்கவில்லை. இந்த தேசம், வழியில்லாத பொட்டல்காடு; 3,500 அடி உயர மலைகள் குறுக்கே நிற்கின்றன; வெயில் அதிகம்; 120 டிகிரி இருக்கும். ஒட்டகப்படையோடு, பிரிடிஷ் சைன்யம் எதிர்பார்த்து நிற்கிறது. முடிவில், ஆகாராதிகள் வராது. இதாலிய சைன்யங்கள் தனியே அகப்பட்டுக் கொள்ளும்: ஆபத்து அதிகம். இதாலிய சைன்யம் ஏடன்குடாவை நோக்கிச் செல்லுகிறது. ஆனுல், ஏடனையாவது, ஸூயஸ் கால்வாயையாவது சேதம் செய்து விடமுடியாது.

(*b*) **லிபியா.**—மேற்கு பாலைவனச்சண்டைகள் வெற்றியாய் முடிந்து, லிபியாவின்கீழ் எல்லைப்புற ஆதிபத்தியம் பிரிடிஷ் வசம் வந்துவிட்டது.

தூர கீழ்நாடுகள் :—

'கோடோ' அல்லது 'உலக சாம்ராஜ்ய வழி' என்று சொல்லப்படும், ஜப்பானியக்கொள்கை அமுலுக்கு வந்துகொண்டிருக்கிறது. ஆசியா (Asia) பொது க்ஷேம மேற்பார்வை ஜப்பானுக்கு உரிமை என்று ஏற்றுக்கொண்ட வெளிநாடுகளின் சிநேகத்தை ஜப்பான் நாடுமாம். தன்னுடைய சைன்யங்களையும், யுத்தக்கப்பல் களையும், விமானங்களையும் இந்து-சீனுவில் வைக்கப்பார்க்கிறது. இது பிரெஞ்சு தேசம். ஜெர்மனி, இதாலியக் கட்டாயத்தால் பிதேன் நடத்தும் பிரெஞ்சு அரசாங்கமும் இதற்கிணங்குகிறது. ஜப்பானிய யுத்தக் கப்பல்களும், சாமான் களும் இந்து-சீனுவுக்கு சமீபமான இடங்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன.

வேவு பார்த்த குற்றம் சாட்டப்பட்டு, தலைவர், காரியதரிசி உள்பட 7 ஸால்வேஷன் சைன்ய அங்கத்தினர் 6-ம் தேதி கைது செய்யப்பட்டனர்.

இன்டர்நாஷனல் ஸெட்டில்மெண்டில், சீனக்கொள்ளைக்காரர்களை எதிர்க்க பிரிடிஷ் பாதுகாப்புக்காக வைத்திருந்த பிரிடிஷ் சைன்யங்கள், ஷாங்கே, வட சீனுவிலிருந்து 9-ம் தேதி வெளிப்படுத்தப்பட்டன. இதில் திருப்தியடைந்ததாக ஜப்பானியர் சொல்லிக்கொள்ளுகிருர்கள்.

10-ம் தேதி, ஹைமன் கோட்டையிலிருந்த சீனப்படையை ஜப்பானிய கடல்படை எதிர்த்தது.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
5—8—40.			
	ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—வீமார் (Weimar), கீல் (Kiel), ஹாம்பர்க் (Hamburg), ஹாலந்து (Holland), வட ஜெர்மனி (Germany).		
	சாமான் கிடங்குகள்.—ஹாம் (Hamm).		
	விமான நிலயங்கள்.—ஷீபால் (Schipol), போர்கம் (Borkum).	நஷ்டமில்லை.	
6—8—40.			
	விமான நிலயங்கள்.—கில்ஸிரிஜன் (Gilse-rijen), இண்டுஹோவன் (Eindhoven), வென்லோ (Venlo), எபன்பர்க் (Ypenburg), ஷீபால் (Schipol), ஆம்ஸ்டர்டாம் (Amsterdam), ஸோயஸ்டர்பெர்க்		அநேகம் நாசமாயின.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
6—8—40—தொடர்ச்சி.			
	(Soesterberg), யுட்ரெக்ட் (Utrecht), லா போர்ஜெட் (Le Bourget), டெக்ஸல் (Texel) தீவு, கிளாடன்பாக் (Gladenbach), க்ரபெல்டு (Krefeld).		தீப்பிடித்தது.
	சாமான் கிடங்குகள்.—ஷ்வர்ட் (Schwerte).		
	எண்ணெய் சுத்தம் செய்யும் ஆலைகள்.—ரீஷால்ஷ் (Reisholz).		
	எண்ணெய் ஆலை.—ஹாம்பர்க் (Hamburg).		தீப்பிடித்தது.
	யுத்த தளவாடங்கள் செய்யுமிடம்.—மோயர்ஸ் (Moers).	1 விமானம்.	
	விமானம் சுடும் பீரங்கிகள்.—டூயிபர்க் (Duisburg).		
7—8—40.			
	பகலில்:—விமான நிலயங்கள்.—செர்பரோ (Cherbourg), ஹாம்ஸ்டெட் (Hamstede).		
	இரவில்.—எண்ணெய் ஆலை.—ஹாம்பர்க் (Hamburg).		
	எண்ணெய் கிடங்கு.—பெர்கனுக் (Bergen) கருகேயுள்ள டோல்விக் (Dolvik).		
	கப்பல் நிற்குமிடங்கள்.—கீல் (Kiel).		
	சாமான் கிடங்குகள்.—ஹாம் (Hamm).		
	வேவு பார்த்தல்.—நார்வே கடற்கரை.	1 விமானம்.	தீப்பிடித்தது.
	எதிரி கப்பல்கள்.—பார்டியா (Bardia) துறைமுகம்.		சில கப்பல்கள் உடைந்தன.
	நீர்மூழ்கிக் கப்பல்கள் நிற்குமிடம்:—மஸாவா (Massawa).	நஷ்டமில்லை.	

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
8—8—40.			
	பகலில்.—விமான நிலயங்கள்.—ஷீபால் (Schipol), வால்கன்பர்க் (Valkenburg), இன்னும் அநேக இடங்களிலும்; லா ஹவேர் (Le Havre).	1 விமானம்.	1 விமானம்.
	இரவில் :—கப்பல் நிற்குமிடம்.—ஹாம்பர்க் (Hamburg).		
	சாமான் கிடங்குகள் :—ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest), குலோன் (Cologne).	1 விமானம்.	
	விமானப்போர்.—லிபியா (Libya).	2 விமானங்கள்.	15 விமானங்கள்.
9—8—40.			
	விமான நிலயங்கள்.—கர்ன்ஸீ (Guernsey), ஷீபால் (Schipol), ஆம்ஸ்டர்டாம் (Amsterdam), இண்டுஹோவன் (Eindhoven), டிரயர் (Trier), கிளிஸ் (Glize), வேர்ல் (Werl), மன்ஸ்டர் (Munster), வென்லோ (Venlo).		அதிக நஷ்டம்.
	கடல் விமானங்கள் நிற்கும் இடம்.—பிரஸ்ட்டுக் (Brest)-கு அருகாமையில் இருக்கும் போல்மிக் (Poulmic).		..
	வெடிமருந்துகள் செய்யும் ஆலைகள்.—லட்விக்ஷாபன் (Ludwigshafen), குலோன் (Cologne).		
	ரயில் பாதை.—ரூர் (Ruhr).		
	தீப்பிடித்த இடங்கள்.—ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest), ரூரோதாபென் (Ruhrorthafen).		
	எண்ணெய் கிடங்குகள்.-ப்ளஷிங் (Flushing).	நஷ்டமில்லை.	ஒரு கப்பல் தீப்பிடித்தது.
	கப்பல்கள்.—டொப்ருக் (Tobruk) ஹார்பர், நெகெல்லி (Negelli).	நஷ்டமில்லை.	4 விமானங்கள் சேதம். பெட்ரோல் கிடங்கு தீப்பிடித்தது.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுபபின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
10—8—40.			
	விமான நிலயங்கள்.—ஷீபால் (Schipol), க்வேக்கர்வில் (Queqerville), வால் ஹாவன் (Waalhaven), ப்ளஷிங் (Flushing), தினர்டு (Dinard), கேயன் (Caen), கர்ன்ஸீ (Guernsey).		
	கப்பல் நிற்குமிடம்.—ஹாம்பர்க் (Hamburg), டுயிபர்க் (Duisburg).		
	கடற்படை நிலயம்.—வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven).		
	எண்ணெய் கிடங்குகள்.—பிராங்பர்ட் (Frankfurt), ஹாம்பர்க் (Hamburg).		
	வெடிமருந்து ஆலை.—குலோன் (Cologne).		
	ரசாயன தொழிற்சாலை.—பிராங்பர்ட் (Frankfurt).		
	உலை.—பிராங்குபர்ட் (Frankfurt)க்கு வடக்கே,		
	சாமான் கிடங்குகள்.—ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest), ஹார்கீஸா (Hargeisa), துர்காரான் (Turgaran) ரோடு.	1 விமானம்	
	துருப்புகள்.—மஸாவா (Massawa), கரீம் பாஸ் (Karim Pass).	நஷ்டமில்லை	
	எண்ணெய் கிடங்கு.—மாய் அடாகா (Mai Adaga).	நஷ்டமில்லை	1 சுழல் விமானம்.
	சைன்யங்கள் தங்குமிடங்கள், மோட்டார்கள்.—லிபியா (Libya)-வில் உள்ள ஸாப்ராஸெல்ஸி (Sabraselsea).		
	விமான நிலயம்.—எரிடிரியா (Eritrea)வில் உள்ள பாரென்ந்துரு (Barendru).		

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
11—8—40.			
	விமான நிலயங்கள்.—தினர்டு (Dinard), கேயன் (Caen).		
	கடல் விமானங்கள் இருக்கும் இடம்.—பிரான்ஸில் உள்ள பிரஸ்டு (Brest).		
	எண்ணெய் ஆலைகள்.—டார்ட்மண்டு (Dortmund), காஸ்டிராப் (Castrop), ராக்ஸல் (Rauxel), கெல்ஸன்கர்சன் (Gelsenkirchen), வான் (Wanne).	......	தீப்பிடித்தது.
	எண்ணெய் கிடங்கு.—செர்பரோ (Cherbourg).		
	ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—டஸ்ஸல்டார்ப் (Düsseldorf), வான் (Wanne), ஹாட்டிங்கன் (Hattingen), டார்ட்மண்டு (Dortmund), ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest).	......	அநேக விமானங்கள் மேல் குண்டுகள் விழுந்தன.
	வேவுபார்த்தல்.—பிரான்ஸின் கடற்கரை.	3 விமானங்கள்	...

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
6—8—40.			
	ஹைபா (Haifa); வாஜீர் (Wajir), ஸ்காட்லாண்டு (Scotland); மறுபடியும் துண்டுப்பிரசுரங்கள் போடப்பட்டன.	......	சிலருக்குக் காயம். சேதமில்லை.
7—8—40.			
	இரவில்.—கிரேட் பிரிடனி (Great Britain)-ல் அநேக பாகங்களில் ஹைபா (Haifa).	......	ஒரு சுகாதார ஸ்தலத்திற்கு சொல்ப சேதம். மற்றபடி சேதமில்லை.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
8—8—40.			
	பகலில்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel); பிரிடிஷ் கடற்கரைக் கருகேயுள்ள அநேக பட்டணங்கள்.	24 சுழல் விமானங்கள் 36 சண்டை விமானங்கள் அநேகம் நாசமாயின	16 சண்டை விமானங்கள். 5,032 டன் மொத்தம் நிறையுள்ள 5 கப்பல்கள் முழுகிப் போயிற்று. சில கப்பல்களுக்குச் சொற்ப சேதம்.
	இரவில்.—டோவர் (Dover) ஜலசந்தி, பிரிஸ்டல் (Bristol) கால்வாய், வடமேற்கு இங்கிலாந்து, இங்கிலாந்தின் தென்மேற்கு ஜில்லாக்கள்.	......	வீடுகளுக்கு சொற்ப நஷ்டம். சிலருக்குக் காயம். ஒருவன் இறந்தான்.
9—8—40.			
	இரவில்.—வடமேற்கு இங்கிலாந்தில் ஒரு பட்டணம், தென்மேற்கு இங்கிலாந்து, வடகிழக்கு இங்கிலாந்து, வேல்ஸ் (Wales).	......	அநேக வீடுகள் நாசமாயின. சிலருக்குக் காயம். சிலர் மாண்டனர்.
10—8—40.			
	பகலில்.—இங்கிலாந்தின் வடகிழக்குக் கரையோரமாக உள்ள ஒரு பட்டணம்; ஏடன் (Aden).	......	சிலருக்குக் காயம். சொற்ப சேதம்.
	இரவில்.—தென்மேற்கு இங்கிலாந்து; பிரிஸ்டல் (Bristol) கால்வாய்.		
11—8—40.			
	பகலில்.—இங்கிலாந்தின் வடகிழக்குக் கரை, டோவர் (Dover), போர்ட்லெண்டு (Portland), வேமத் (Weymouth), மிட்லண்ட்ஸ் (Midlands), வேல்ஸ் (Wales). [400 விரோதி விமானங்கள் இன்று சண்டையில் கலந்துகொண்டன.]	65 விமானங்கள்	அநேக வீடுகள் சேதமாயின. 26 சண்டை விமானங்கள்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
11—8—40.			
	இரவில்.—வடகிழக்கு இங்கிலாந்து, மிட்லண்ட்ஸ் (Midlands), இங்கிலாந்தின் தென்மேற்கில் ஒரு ரயில்வே ஸ்டேஷன்.	......	சேதமில்லை.
	விமானங்கள் இறங்குமிடம்.—ஸுடான் (Sudan), ஏடன் (Aden), மால்டா (Malta).	1 விமானம்	சொற்ப நஷ்டம்.
12—8—40.			
	போர்ட்ஸ்மத் (Portsmouth), வைட் (Wight) தீவு, ஸஸ்ஸெக்ஸ் (Sussex), கெண்டு (Kent) கடற்கரைகளில் உள்ள சில பட்டணங்கள்.	62 விமானங்கள்	சொற்ப சேதம். ஒரு மாதா கோவிலுக்கும் சில வீடுகளுக்கும் சேதம். சிலருக்குக் காயம்.
13—8—40.			
	(பி. பி. ஸி. யிலிருந்து) பிரிடிஷ் கால்வாய், ஸஸ்ஸெக்ஸ் (Sussex), பிரிடிஷ் கடற்கரைக்கருகே உள்ள அநேக கப்பல்கள்.	78 விமானங்கள்	13 விமானங்கள். 8 விமானிகள் பத்திரமாயிருக்கிறார்கள்.

அனுபந்தம்.

ஜெர்மன் ஒலிபரப்பு.

ஜெர்மன் ஒலிபரப்பைக் கேட்கிறாயா ?

அப்படியானால், கீழெழுதியிருப்பது உனக்காகத்தான்.

1. இந்த யுத்தத்துக்கு முன் இந்தியாவை லக்ஷியம் செய்து ஜெர்மனி ஒலிபரப்பவில்லை.

கீழ் தேசத்தார்களை மூடர்களென்றும், கறுப்பு மனிதர்களை, கொச்சி நாய்களைப் போல் வளர்க்கவேண்டுமே ஒழிய, புத்தியை உபயோகித்து செய்யவேண்டிய வேலைகளுக்கு அவர்கள் லாயக்கில்லையென்றும், அதற்கு அவர்களைப் பழக்குவது கடவுளுக்கு விரோதமென்றும் ஹிட்லர் மைன் காம்பி (Mein Kampf)ல் சொல்லியிருக்கிறார்.

2. ஆனாலிப்பொழுது காரியத்தை வேண்டி சரஸமாய்ப் பேசுகிறார்கள்.

"எங்கள் செய்திகளைக் கேட்டு உங்கள் நேயர்களுக்கும் சொல்லுங்கள்; பத்திரிகைகளில் வெளிப்படுத்துங்கள்" என்கிறார்கள்.

இது எதிரியின் வார்த்தை: இணங்கப்போகிறாயா?

3. "இணங்காவிட்டால், உஷார்" என்று பயமுறுத்துகிறார்கள்.

'பிரிடனை தாக்குமுன் பகிரங்கமாகவோ, மறைவாகவோ பிரிடிஷாருக்கு இது வரையில் செய்த உதவியை நிறுத்திவிடவேண்டும்; இல்லாவிடடால் பிரிடிஷ்க் கப்பல்களை அமிழ்த்துவது போல் உங்களையும் அமிழ்த்திவிடுவோம்' என்று இந்துஸ்தானியில் ஜூலை 12-ல் ஜெர்மனியிலிருந்து, ஒலிபரப்பு வந்தது.

அதாவது, ஸெகோஸ்லவோகியா, ஆஸ்திரியா, போலன்ட், நார்வே, டென்மார்க், ஹாலண்டு, பெல்ஜியம், லக்ஸம்பர்க், பிரான்ஸ் நாடுகள் கதிதான் உனக்கும்.

4. இவ்வளவு ஊக்கத்தோடு இந்தியர்கள் நட்பைக்கோருவானேன் ?

இது, இந்தியர்களின் க்ஷேமத்துக்கில்லை. இந்தியர்கள், ஒன்று சேர்ந்தால் தனக்கு அபாயம் வருமென்ற அச்சம்தான். இதற்காக இந்தியர் மனதைக் கலைக்கப் பார்க்கிறது.

வெடிகுண்டையும், விஷக்காற்றையும் பிரயோகிப்பதுபோல், யுத்தத்தில், பிரசாரத்தையும் உபயோகிக்கவேண்டுமென்பது ஜெர்மன் கொள்கை.

5. ஜெர்மன் ஒலிபரப்பைக் கேட்பானேன்?

நடு நிலைமையில் மனதை வைத்துக்கொண்டு, இருதிறத்தாரையும் கேட்க எண்ணமோ? சரி—ஆனால் ஜாக்கிரதை! தொத்து வியாதியைப்போல, கெட்ட செய்தியும், அணுகினால், உன்னைக்கெடுத்துவிடும்.

ஜெர்மன் பொய்க் கதைகளைக்கேட்டு மனதை புண்ணாக்கிக் கொள்ளுவதில் உனக்கு சந்தோஷமா? ஜெர்மன் பயமுறுத்தலைக்கேட்டு மனம் துடிதுடிக்க வேண்டுமென்ற ஆசையா? ஜெர்மன் ஜம்பவார்த்தையைக்கேட்டு நடுங்கவேண்டு மென்ற அவாவா? அப்படியானால் உன்புத்தி வக்கரித்து விட்டது: பயித்தியமா யிருக்கலாம். மனவைத்தியனைக் கலந்துகொள்.

அல்லது, நீ மூடனாயிருக்கலாம். ஜுலை 5-ம் தேதி பம்பாய் வெடிவிமானங் களால் தகர்க்கப்படுமென்று ஜெர்மன் ஒலிபரப்பு வந்து, இதை நம்பி சில அசடு கள், கையிலிருந்த பணத்தையெல்லாம் மூட்டைகட்டிக்கொண்டு வெளியோட, வழியில் திருடர்கள் பணத்தை அபகரித்த கதையாய், உன்கதியும் முடியும். மூட னுக்கும், பணத்துக்கும் வெகுதூரம்.

அல்லது, நீ ரகசிய அபிமானியாயிருக்கலாம். அப்படியானால் நாகரிக மனிதனல்ல. 5-ம் படை—அதாவது உன்தேசத்துக்கும், உலக நாகரிகத்துக்கும் நீ துரோகியாவாய்.

6. பித்தனே, மூடனே, துரோகியோ, நீ யாராயிருந்தாலும் சரி, இதர கீழ்நாடுகள் சொல்லுவதைக்கேள்.

டெஹரான் (Tehran) பத்திரிகை சொல்லுவது:—"நாள் தவறாது, தீய எண்ணங்களை எதற்காக ஒலிபரப்புவது? கீழ், மேல் நாடுகளைப் பிடிக்க ஆவலிருந் தால், சுயபாஷையில் பேசாது, பெர்ஸிய பாஷையில் பேசுவானேன்? கீழ் தேசத்தார் எங்களுக்கு சிநேகிதர்கள், சகோதரர்கள். இம்மாதிரியான ஒலி பரப்பை நாங்கள் வெறுக்கிறோம்."

7. ஜெர்மானியர்களுக்கே ஜெர்மன் ஒலிபரப்பில் நம்பிக்கையில்லை.

வெளியூர் செய்திகள் உள்ளே வர ஜெர்மனி பயப்படுகிறது. இதற்காக வெளி நாட்டு ஒலிபரப்பைக் கேட்பவர்களுக்கு 5-வித தண்டனைகள் சட்ட பூர்வமாக விதித்திருக்கிறார்கள். மார்ச்சு, அல்லது ஏப்ரலாரம்பத்தில் 82 பேர்களுக்கு இந்தக் குற்றத்துக்காக 3 மாதத்திலிருந்து 2 வருஷம் வரை காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நிபந்தனையிருந்தும் அனேக ஜெர்மானியர்கள் பிரிடிஷ் ஒலிபரப்பைக் கேட்கிறார்கள்; இந்த ஆசை ஜெர்மனி முழுவதும் பரவி விட்டபடியால் அடக்க முடியவில்லை.

உள்ளூர் செய்தியை, ஜெர்மானியரே நம்பாதபோது நீ ஏன் நம்புகிறாய்?

8. பிரசாரத்துக்கு மூலஸ்தானமான ஹிட்லர் சொல்லுவதைக்கேள்.

"இடைவிடாது, சாதுரியமாக பிரசாரம் செய்தால், சுவர்க்கத்தை நரகமாயும், துர்த்திசையை இந்திர பதவியாயும் மாற்றிவிடலாம். அபாண்டமாய் புழுகினுல் நம்பாதவர் எவர்?" என்று மைன் காம்பில் எழுதியிருக்கிருர்.

ஆகவே,

ஜெர்மன் ஒலிபரப்பைக் கேட்டு, பிறருக்குச் சொல்லும், ஒவ்வொரு சமயமும்,

ஜெர்மன் வீண்பேச்சைக் கேட்கிற ஒவ்வொரு சமயமும்,

ஜெர்மன் வெருட்டலுக்குப் பயப்படுகிற ஒவ்வொரு சமயமும்,

ஜெர்மன் வார்த்தையை நம்புகிற ஒவ்வொரு சமயமும்,

ஹிட்லர் ஜெயிக்க நீ உதவுகிறவனுவாய்.

PROGRAMME OF LECTURES

OF THE

Pudukkottai War Information Bureau.

LECTURE VI.

1940—

August	17, Saturday ...	Town Hall	...	6.30 p. m.
	18, Sunday ...	Alangudi	...	5.00 p. m.
		Kilanilai	...	5.00 p. m.
	19, Monday ...	Rayavaram	...	5.00 p. m.
	20, Tuesday ...	College	...	10.35 a. m.
		Rani's School	...	10.35 a. m.
		C. S. M. School	...	10.00 a. m.
		Virachalai	...	4.30 p. m.
		Keeranur	...	5.00 p. m.
	21, Wednesday..	Ponnamaravathi	...	5.00 p. m.
		Nachandupatti	...	5.00 p. m.
		Annavasal	...	5.00 p. m.
	22, Thursday ...	Andakkulam	...	5.00 p. m.
		Vehupatti	...	4.30 p. m.

LECTURE VII.

	24, Saturday ...	Town Hall	...	6.30 p. m.
	25, Sunday ...	Yembal	...	4.30 p. m.
		Kulipirai	...	5.00 p. m.
		Tirumayyam	...	5.00 p. m.
		Konapet	...	5.00 p. m.
	26, Monday ...	College	...	10.30 a. m.
		Rani's School	...	10.30 a. m.
		Vendampatti	...	5.00 p. m.
	27, Tuesday ...	C. S. M. School	...	10.00 a. m.
		Arimalam	...	5.00 p. m.
		Karambakkudi	...	5.00 p. m.
		Venkatakulam	...	4.30 p. m.

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,850—16-8-40.